

பாடம் 4

அக்டோபர் 20 - 26

# ஒற்றுமைக்கான திறவுகோல்

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *எபேசியர் 1:3-14; கலாத்தியர் 4:7; எபேசியர் 2:11-22; எபேசியர் 4:1-6,11; மத்தேயு 20:25-28; எபேசியர் 5:15-6:9.*

**மனன வசனம்:** காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட வேண்டுமென்று, தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார். எபேசியர் 1:10.

எபேசு பட்டணம் ஒரு முக்கிய வர்த்தக மையம்; சின்ன ஆசியாவில் செல்வாக்குமிகுந்த பகுதி. எபேசு சபையில் யூதர்களும், புறஜாதியார்களும் இருந்தார்கள். அந்தச் சூழலில் எப்போதும் சண்டைதான் இருந்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் கிறிஸ்துவை அறிந்திருந்தார்கள். சபை சரீரத்தின் அங்கங்களாக ஒற்றுமையோடு இருந்தார்கள்.

ஒற்றுமையின் இரண்டு பரிமாணங்களை பவுல் காட்டுகிறார். சபையில் ஒற்றுமை. அங்கே யூதர்களும் புறஜாதியாரும் ஒரே சரீரமாகிய கிறிஸ்துவுக்குள் ஒன்று கூட்டப்படுகிறார்கள். பிரபஞ்சத்தில் ஒற்றுமை. அங்கே பூமியிலும் பரலோகத்திலும் உள்ள யாவும், கிறிஸ்துவுக்குள் இறுதியாக ஒன்றுகூட்டப்படுகின்றன.

கிறிஸ்துவே இந்த ஒற்றுமையின் ஆதாரம். '**கிறிஸ்துவுக்குள்**' '**கிறிஸ்துவுடன்**' என்கிற வார்த்தைகளை பவுல் தன் நிருபங்களில் பல முறை பயன்படுத்துகிறார்; இயேசுவின் வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல் மூலம் நமக்காகவும், இப்பிரபஞ்சத்திற்காகவும் தேவன் நிறைவேற்றியிருப்பதை அதன்மூலம் சுட்டிக்காட்டுகிறார். அனைத்தையும் கிறிஸ்துவின்மூலம் ஒன்றாக இணைப்பதுதான் இரட்சிப்பின் திட்டத்தில் தேவனுடைய இறுதி நோக்கம்.

***2018, அக்டோபர் 27 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்***



ஞாயிறு அக்டோபர் 21

# கிறிஸ்துவுக்குள் ஆசீர்வாதம்

**கேள்வி: கிறிஸ்துவுக்குள் நமக்கு என்னவெல்லாம் தேவன் தந்திருக்கிறார்? எபே 1:3-14.**

அவருடைய பிள்ளைகளாக, நாம் உலகத்திற்கு தேவனை வெளிப்படுத்தவேண்டும். தேவனோடு நமக்குள்ள உறவை பல உருவகங்கள்மூலம் பவுல் விளக்குகிறார். இவற்றில் **சுவீகாரம்** என்கிற உருவகம், இந்தப் பாடத்தின் மையக்கருத்தான ஒற்றுமைபற்றி ஆராய உதவியாக இருக்கும். கிறிஸ்துவுக்குள் நம்மைச் சுவீகரித்து, தேவன் நம்மை தேவ குடும்பத்தில் சேர்த்துள்ளார். குடும்பம் என்கிற உருவகம் கூட, இஸ்ரவேலரோடு தேவன் செய்த உடன்படிக்கையைத்தான் சுட்டிக் காட்டுகிறது. இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொள்கிற புறஜாதியாரும் தேவனுடைய பிள்ளைகளே. இஸ்ரவேலரோடு தேவன் செய்த உடன்படிக்கைகளில் அவர்களுக்கும் பங்கு உண்டு. ரோமர் 8:17; கலா 4:7. கிறிஸ்துவோடு உறவு வைத்திருப்பதே கிறிஸ்தவ ஒற்றுமையை உண்டாக்குகிறது. கிறிஸ்துவுக்குள் மனிதர்கள் அனைவரையும் ஒன்றாகக் கூட்டவேண்டும் என்பதுதான் தேவனுடைய ஆசை. தேவகுடும்பத்தின் பிள்ளைகள் நாம்; நம் அனைவரையும் அவர் ஒன்றுபோல நேசித்தார்.

நாம் முன்குறிக்கப்பட்டதாக எபே 1:4,12 கூறுகின்றது. இரட்சிப்பிற்கு தேவன் நம்மைத் தெரிந்துகொண்டாரென்றால், இரட்சிப்பை இழந்துபோகும்படி சிலரைத் தெரிந்துகொள்கிறாரா? அப்படி இல்லை. மாறாக, எல்லாரும் இரட்சிக்கப்படும்படி உலகத் தோற்றத்திற்கு முன்னரே இரட்சிப்பின் திட்டத்தை தேவன் உருவாக்கினார். ‘தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.’ யோவான் 3:16; 1தீமோ 2:6; 2பேதுரு 3:9. இரட்சிப்பின் அழைப்பை யாரெல்லாம் ஏற்றுக்கொள்வார்கள் என்பது ஏற்கனவே தேவனுக்குத் தெரியும்; ஆனால், எவருடைய தீர்மானத்தையும் அவர் கட்டுப்படுத்துவது இல்லை. கிறிஸ்து நமக்காகச் செய்தவற்றின்நிமித்தம் இரட்சிப்பை எல்லோருக்கும் தருகிறார். இச்சலுகையைப் பெற நாம் ஆயத்தமா? கட்டாயப்படுத்தி தேவன் இரட்சிப்புக்குள் வழிநடத்தமாட்டார்.

‘‘மனிதர்கள் அக்கிரமக்காரர்களாக இருந்தாலும், தங்கள் கீழ்ப்படியாமையால் அவர்கள் அழிந்துபோகக்கூடாது; தங்கள் பதிலாளியும் பிணையாளியுமான கிறிஸ்துவை விசுவாசிப்பதன்மூலம் இயேசு கிறிஸ்துவுக்குள் அவருடைய புத்திரர்களாக சுவீகரிக்கப்பட பரலோக ஆலோசனைச் சங்கத்தில் முன்னேற்பாடு செய்யப்பட்டுள்ளது. எல்லா மனிதர்களும் இரட்சிக்கப்பட தேவன் சித்தமுள்ளவராக இருக்கிறார்; பிணையத்தொகையாக தேவனுடைய ஒரே பேறான குமாரனைக் கொடுத்து, தேவையான எல்லா ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார்.

**சிந்திப்பதற்கு:** இயேசுகிறிஸ்துமூலம் தேவனுடைய பிள்ளைகளாக சுவீகரிக்கப்படுவதற்கு மறுக்கிறவர்கள்தாம் அழிவார்கள்.



# பிரிவினை சுவரைத் தகர்த்தல்

இன-கலாச்சார-மத பேதங்கள்தாம் மக்கள்மத்தியில் அதிக பிரிவினையை உண்டாக்குகின்றன. பல நாடுகளில் கலாச்சார, மத அடிப்படையில் அடையாள அட்டைகள் வழங்குகிறார்கள். இந்த வேறுபாடுகளை வைத்தே சலுகைகள் வழங்குகிறார்கள் அல்லது கட்டுப்பாடுகள் விதிக்கிறார்கள். சச்சரவு எழும்பும்போது இந்தக் குறியீடுகள்தாம் அடக்குமுறைக்கு உதவுகின்றன.

**கேள்வி: கிறிஸ்தவ மக்களின் நல்வாழ்வுக்கான வழிபற்றி பவுல் என்ன கூறுகிறார். எபே 2:11-22. கிறிஸ்துவுக்குள்ளான ஒற்றுமை நம் வேறுபாடுகளில் எத்தகைய தாக்கத்தை உண்டாக்குகிறது? சிலுவையில் இயேசு மரித்ததால் தகர்ந்து எது?**

கிறிஸ்துவுக்குள் தேவகிருபையைப் பெறுவதற்குமுன் வாழ்க்கை எப்படி இருந்ததென்று யோசிக்கும்படி எபேசியரிடம் பவுல் சொல்கிறார். இன, கலாச்சார, மத வேறுபாடுகளால் அவர்கள்மத்தியில் பகையும் சண்டைகளும் உண்டாயின. கிறிஸ்துவுக்குள் நாம் ஒரே மக்களாக, ஒரே இரட்சகரையும் ஆண்டவரையும் பெற்றவர்களாகஇருக்கிறோம். நாம் எல்லாருமே தேவனுக்குச் சொந்தமானவர்கள். இதுவே, நற்செய்தி. 'முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்.' எபே 2:13.

பண்டைய எருசலேம் தேவாலயத்தில் யூத இனத்தவருக்கு ஒரு பகுதியும் பிற இனத்தவருக்கு ஒரு பகுதியும் இருந்தன. அவற்றுக்கு இடையே ஒரு சுவர் கட்டியிருந்தார்கள். யூதர்களுடைய பகுதியில் வேறு யாரும் செல்லக்கூடாதென்றும், மீறினால் மரணதண்டனைக்கு ஆளாவர்கள் என்றும் அந்தச் சுவரில் எழுதியிருந்தார்கள். பவுல் தன் ஊழியப்பயணங்களை முடித்து திரும்பியபிறகு தேவாலயத்திற்குள் சென்றபோது, இந்தக் கட்டுப்பாட்டை மீறியதாகக் குற்றஞ்சாட்டினார்கள். தேவாலயத்தில் யூதர்களுடைய பகுதிக்குள் துரோப்பீமு எனும் ஒரு எபேசியனை அவர் அழைத்து சென்றதாகக் குற்றஞ்சாட்டித்தான் பவுலைக் கைதுசெய்தார்கள். அப் 21:29. இந்தச் சுவரை மனதில் வைத்துதான்'அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்தார்' என்று எழுதுகிறார். எபே 2:14.

ஆதாமின் சந்ததியாரான விசுவாசிகள், கிறிஸ்துவுக்குள் விருத்தசேதனம் பெறுகிறார்கள். ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த சரீரப்பிரகாரமான விருத்தசேதனமானது, கிறிஸ்துவுக்குள் விசுவாசிகள் பெறவிருந்த ஆவிக்குரிய விருத்தசேதனத்தைச் சுட்டிக்காட்டியது. உபா 10:16. 'நீங்கள் கிறிஸ்துவைப்பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவசரீரத்தைக் களைந்துவிட்டதினால், கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள்.' கொலோ 2:11.

எபே **2:11–22**இல் பவுல் வலியுறுத்துகிற விஷயங்களை எவ்விதங்களில் எல்லாம் நம்முடைய சபைகளில் காண்கிறோம்? இன்னும் இதில் நமக்குள்ள சவால்கள் என்ன?

## செவ்வாய் அக்டோபர் 23



# ஒரே சரீரத்திற்குள்ளாக ஒற்றுமை

யூதரும் புறஜாதியாரும் வெவ்வேறு கலாச்சாரப் பின்னணியுள்ளவர்கள். அவர்களுக்கிடையே ஒற்றுமை என்பது கட்டுக்கதையோ கருத்தியல் புனைவோ அல்ல; அது நிஜம்; ‘அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய்’ நடப்பதற்கான அழைப்பு ஆகும். எபே 4:1.

**கேள்வி: கிறிஸ்தவர்கள் தங்களுடைய அழைப்புக்கு என்னென்ன வழிகளில் பாத்திரவான்களாக நடந்துகொள்ள வேண்டும்? எபே 4:1-3.**

இத்தகைய அன்பின் நடத்தைகள் கிறிஸ்தவ வாழ்க்கையில் இருந்தால், ‘சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமை’ உண்டாகும். எபே 4:3. இந்த குணநலன்கள் அனைத்திற்கும் அன்புதான் வேர். 1கொரி 13:1-7. நடைமுறையில் அன்பு வெளிப்படும்போது, நம் மத்தியிலுள்ள உறவை அது பாதுகாக்கிறது; சபையிலும் வெளியிலும் சமாதானமும் ஒற்றுமையும் அதிகரிக்கிறது. சபையில் ஒற்றுமை இருந்தால், மற்றவர்கள் காணும்படியான விதங்களில் தேவ அன்பு வெளிப்படும். சண்டையும் பிரிவினைகளும் போர்களும் நிறைந்த இந்த நாட்களில் அத்தகைய சாட்சியாகத் திகழ, சபையை தேவன் அழைக்கிறார்.

**கேள்வி: எபே 4:4-6 வசனங்களின் முக்கியக் கருத்து என்ன?**

1. ஒற்றுமையை முக்கியம். எபே 4:1–3.
2. விசுவாசிகளின் ஒற்றுமைக்கு அவசியமான ஏழு விஷயங்கள். எபே 4:4–6.

விசுவாசிகள் ஏற்கனவே ஒற்றுமை பெற்றிருக்கிறார்கள். எபே 4:4-6. அந்த ஒற்றுமையைக் காத்துக்கொள்ளவேண்டும். எபே 4:1-3. அதை எதிர்காலக் குறிக்கோளாக வைத்திருக்கவேண்டும். எபே 4:13.

“தான் அறிவித்திருந்த சத்தியத்தின் வல்லமையை வாழ்க்கையில் வெளிப்படுத்துமாறு தன் சகோதரரை அப்போஸ்தலன் அறிவுறுத்துகிறார். சாந்தம், நற்குணம், நீடியபொறுமை, அன்பு போன்றவற்றின் மூலம் கிறிஸ்துவின் குணத்தையும் அவருடைய இரட்சிப்பின் ஆசீர்வாதங்களையும் அவர்கள் வெளிப்படுத்த வேண்டும். ஒரே சரீரமும், ஒரே ஆவியும், ஒரே ஆண்டவரும், ஒரே விசுவாசமும் உண்டு. கிறிஸ்துவுடைய சரீரத்தின் அங்கங்களான விசுவாசிகள் அனைவருக்கும் ஒரே ஆவியும் ஒரே நம்பிக்கையுமே இருக்கவேண்டும். சபையில் உண்டாகும் பிவினைகளால் உலகத்தார்முன் கிறிஸ்துவின் மார்க்கம் இழிவடைகிறது. சத்தியத்திற்கு எதிரானவர்கள் தங்கள் வழியை நியாயப்படுத்த வாய்ப்புண்டாகிறது. தன் நாட்களிலிருந்த சபைக்காக மட்டும் பவுல் இந்தப் போதனைகளை எழுதவில்லை. நாமும் அவற்றால்பயனடையவேண்டும்என்பதேதேவதிட்டம். சமாதானக்கட்டினால் ஒருமையைக் காத்துக்கொள்ள நாம் என்ன செய்கிறோம்?” - *5T, p 239.*

‘அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களாய் நடப்பதற்கு’ என்னென்ன தீர்மானங்களை இப்போது செய்யலாம்?



# சபைத்தலைவர்களும் ஒற்றுமையும்

'கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது.' எபே 4:7. இரட்சிப்பு ஓர் ஈவு; விரும்புகிறவர்கள் அதைப் பெறலாம்; ஆனாலும், ஆவிக்குரிய வரங்களை குறிப்பிட்ட நோக்கத்திற்காக சிலருக்குத் தருகிறார்.

**கேள்வி: சபைக்கென்று தேவன் அருளுகிற தலைமைத்துவ ஈவுகள் யாவை? எபே 4:11. தலைமைத்துவத்துக்கென்று தேவன் அருளுகிற விசேஷித்த ஈவுகளின் நோக்கம் என்ன? எபே 4:12.**

எல்லா கிறிஸ்தவர்களுமே ஒரு விதத்தில் தேவனுடைய ஊழியர்கள்; நற்செய்தியை அறிவிக்கும் பணியாளர்கள். உலகமெங்கும் போய், மக்களைச்சீடர்களாக்கி, ஞானஸ்நானங்கொடுத்து, அவர்களுக்குப் பிரசங்கியுங்கள் என்று மத் 28:19,20இல் கிறிஸ்து கொடுத்துள் கட்டளை விசுவாசிகளுக்கும் பொருந்தும். போதகர்கள்மட்டும்தான் ஊழியப்பணியைச் செய்யவேண்டும் என்பதில்லை; கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்திருக்கிற ஒவ்வொருவரும் செய்யவேண்டும். ஊழியப்பணி தனக்குமட்டுமே உரியது என்று எந்தப் போதகரும் சொல்லமுடியாது. சபையில் பக்திவிருத்தி உண்டாக்கவே தலைமைத்துவ ஈவுகள் அருளப்படுகின்றன. சபைத்தலைவர்கள் ஒற்றுமையைப் பேணி வளர்க்கவேண்டும்; ஊக்குவிக்கவேண்டும்.

'நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும்' அதற்கான வேலைசெய்வது வரம்பெற்றோரின் பொறுப்பாகும். விசுவாசிகளின் ஊழியத்தில் அவர்கள் உறுதுணையாக இருக்கவேண்டும். கிறிஸ்துவின் சரீரத்தில் பக்திவிருத்தி உண்டாக்க உழைக்கவேண்டும். எபே 4:13. இயேசுவின் தலைமைத்துவ பாணிதான் நம்முடைய ஊழியத்திற்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும். இயேசு ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியம்செய்ய வந்தார். மத் 20:25-28. நாமும் அப்படியே செல்லவேண்டும்; செய்யவேண்டும்.

தாங்கள் யாரையும் சார்ந்திருக்கக்கூடாது; தாங்கள் யாருக்கும் பொறுப்பாளிகள் இல்லை என்கிற போக்கு மனிதர்கள் மத்தியில் அதிகமாகக் காணப்படுகிறது. மேற்கத்திய மக்கள் இத்தகைய எண்ணத்தால் வாதிக்கப்படுகிறார்கள். ஆனால், கிறிஸ்தவன் தனியாளில்லை என்று பவுல் கூறுகிறார். நாம் ஒரு விசுவாசக் குடும்பமாக மாறுகிறோம்; நம்முடைய பயணத்தில் ஒருவரை ஒருவர் ஊக்கப்படுத்த, ஆவிக்குரிய தலைவர்கள் இருக்கிறார்கள். நாம் அனைவரும் கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களாக இருக்கிறோம்.

உங்களிடம் என்னென்ன ஆவிக்குரிய வரங்கள் உள்ளன? உங்களுடைய சபையின் ஒற்றுமைக்காக அவற்றை எவ்வாறு பயன்படுத்துகிறீர்கள்?

வியாழன் அக்டோபர் 25



# கிறிஸ்துவுக்குள் மனித உறவுகள்

கிறிஸ்தவ மார்க்கம் என்பது உறவுகளின் மார்க்கமாகும்; தேவ னோடும் மனிதர்களோடும் உறவுவேண்டும். தேவனோடு உறவு இருந் தால் பிறமனிதர்களோடுள்ள உறவில் அது தாக்கத்தை ஏற்படுத்தும். யாருமே இல்லாமல் தனியாக வாழ்வது கிறிஸ்தவம் அல்ல. எபேசிய ரில் பவுல் வலியுறுத்துகிற ஒற்றுமை குறித்த நியதிகள், மற்றவர்களோடு நமக்குள்ள உறவுக்கும் பொருந்தக்கூடியதாகும்.

**கேள்வி: கீழ்ப்படிதலுக்கும் ஒற்றுமைக்கும் உள்ள உறவு என்ன? எபே 5:15-21. வசனம் 21இல் பவுல் எதை வலியுறுத்துகிறார்?**

---

ஒருவருக்கொருவர் கீழ்ப்படியும்படி பவுல் அறிவுறுத்துகிறார்; ஆவியினால் நிறைந்திருப்பதையும் கீழ்ப்படிதலையும் சம்பந்தப் படுத்துகிறார். எபே 5:18. ஆவியால் நிறைந்திருக்கும்போது, கீழ்ப்படிவதும் காணப்படும். அதாவது தெளிவாகச் சிந்தித்து, கீழ்ப் படிகிற மனப்பான்மை இருக்கும். பெரும்பாலான ஆளுமைப்பண்புகள் போல இது இயல்பாகக் கிடைக்கிற குணம் கிடையாது; ஆவியானவர் நம் இருதயங்களில் வசிப்பதால் உருவாகிற குணமாகும். கிறிஸ்துவுக் குள்ளான ஒற்றுமைக்கு இணைப்புச் சங்கிலியாக இருக்கிற அதே ஆவி யானவர்தாமே இந்த ஈவையும் தருகிறார். கிறிஸ்துவின் மேலும், அவர் நமக்காகச் செய்த பலியின்மேலும் நமக்குப் பக்தி உண்டாகும்போது, இந்தக் கீழ்ப்படிதல் தானாக உள்ளிருந்து புறப்படுகிறது.

**கேள்வி: பரஸ்பர கீழ்ப்படிதலால் ஒரு கிறிஸ்தவ விசுவாசியின் குடும்பத்திலும் அவர் வேலைசெய்கிற இடத்திலும் எப்படிப்பட்ட தாக்கம் உண்டாகும்? எபே 5:22-6:9.**

---

ஒருவிதத்தில், குடும்ப ஒற்றுமையைச் சார்ந்துதான் சபை ஒற்றுமை இருக்கிறது. கணவன்-மனைவிக்கு இடையே நிலவுகிற ஒற்றுமையும் அன்பும் மரியாதையும், கிறிஸ்து சபைமேல் வைத்துள்ள அன்பையும் தியாகத்தையும் பிரதிபலிப்பதாக இருக்கவேண்டும். எனவே, குடும்பத்தில் கணவன்-மனைவி மத்தியிலும், சபையில் சபை அங்கத்தினர்கள் மத்தியிலும் கிறிஸ்துவைப் போன்ற கண்ணியம் நிலவ வேண்டும். பெற்றோர்-பிள்ளைகள் இடையேயுள்ள உறவுகளிலும், எஜமான்கள்-வேலையாட்கள் இடையேயுள்ள உறவுகளிலும் கிறிஸ்து வின் பண்புகள் வெளிப்படவேண்டும். நம்முடைய குடும்பத்தில் எப்படிப்பட்ட இசைவும் சமாதானமும் நிறைந்திருக்க வேண்டுமோ, அப்படியே அவை நம் சபையிலும் நிறைந்திருக்க வேண்டும்.

உங்கள் சூழ்நிலைகளைப் பொறுத்து, உங்கள் குடும்பத்தில் ஒருவரிடமோ, சகபணியாளர் ஒருவரிடமோ நடந்துகொள்ள வேண்டிய விதம்குறித்து இதிலிருந்து என்ன நியதிகளைக் கற்றுக்கொள்ளலாம்?



## மேலும் படிக்க:

‘தேச—சமுதாய—மத பிரிவினையை இயேசு அங்கீகரிக்கவில்லை. பரலோகத்தின் ஈவுகள் எல்லாம் தங்களுக்கும் தங்கள் தேசத்திற்கும்தான் சொந்தம் என்று சொல்லி, உலகத்தில் தேவ குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்களை ஒதுக்க பரிசேயர்களும் வேதபாரகர்களும் விரும்பினார்கள். ஆனால் ஒவ்வொரு பிரிவினைச் சுவரையும் தகர்ப்பதற்கு இயேசு வந்தார். பூமிக்குப் புத்துயிரூட்டுகிற மழையையும் காற்றையும் வெளிச்சத்தையும் போல, தம் இரக்கத்தின் ஈவும் அன்பும் எந்த வரையறைக்கும் உட்பட்டது அல்ல என்பதைக் காட்ட அவர் வந்தார்.

‘சாதி, மத பேதமில்லாத ஒரு மார்க்கம்; யூதனும் புறஜாதியானும், அடிமையும் சுயாதீனனும் சகோதரத்துவத்தால் பிணைக்கப்பட்டு, தேவனுக்குமுன் சமமாக இருக்கிற ஒரு மார்க்கம். அதைத்தான் கிறிஸ்துவின் வாழ்க்கை ஸ்தாபித்தது. எந்தக் கொள்கையின் தாக்கத்தாலும், அவர் இயங்கவில்லை. உறவினர்—அந்நியர், நண்பர்கள்—எதிரிகள் என்று அவர் வேறுபாடு பார்க்கவில்லை. ஜீவத்தண்ணீருக்கு ஏங்குகிற ஓர் ஆத்துமாவே அவருடைய தேட்டமாக இருந்தது.’ – *EGW, 9T, p 190,191.*

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *‘தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் சத்தியத்தை விளங்கிக்கொள்ளும்படி தேவதிட்டமானது எளிமையாகவும், தெளிவாகவும் எபேசியர் நான்காம் அதிகாரத்தில் வெளிப்படுகிறது. சபையில் ஒற்றுமையைப் பாதுகாத்து, பயன்மிக்க ஆவிக்குரிய அனுபவத்தை சபை அங்கத்தினர்கள் உலகத்திற்கு வெளிப்படுத்தும்படி, அவர் நியமித்துள்ள வழிவகைகள் தெளிவாகப் புரிகின்றன.’ - EGW, 6SDABC, p 1117. சபை ஒற்றுமைபற்றி எபேசியர் 4 சொல்கிற விஷயங்கள் யாவை? அந்த ஒற்றுமை காணப்பட, நாம் என்ன செய்யலாம்?*

2 *மனத்தாழ்மையும் கீழ்ப்படிதலும்தான் ஒற்றுமைக்கான முக்கிய பண்புகளாகும். இந்தப் பண்புகள் இல்லாமல், சபையில் ஏதாவது ஒற்றுமை காணப்பட முடியுமா? என்னுடைய கருத்துதான் சரி, நான் இறங்கிவரமாட்டேன், யார் சொன்னாலும் கேட்கமாட்டேன் என்று சொன்னால், ஒற்றுமை சாத்தியமா? மனத்தாழ்மையும் கீழ்ப்படிதலும் நமக்கு எவ்வாறு கிடைக்கும்?*

3 *எல்லா விஷயங்களிலும் நமக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும், எவ்வாறு ஒற்றுமையோடு இருக்கலாம்?*

**பாடச்சுருக்கம்: எபேசியருக்கு எழுதின நிருபத்தில், ‘கிறிஸ்துவுக்குள் இருப்பது’ என்றால் என்ன என்பதுபற்றிய ஆலோசனைகளைப் பவுல் சொல்கிறார். இயேசுவுக்குள்ளான இரட்சிப்பானது, நடைமுறைரீதியில் நமக்குள் மாற்றத்தை உண்டாக்குகிறது. சபையிலுள்ள சகோதர, சகோதரிகளோடுள்ள உறவுகள் உட்பட, நம்முடைய ஒட்டுமொத்த உறவுகளிலும் கிறிஸ்துவின் வல்லமை மாற்றத்தைக் கொண்டுவருகிறது. நான் ஒற்றுமையுடன் இருக்கவேண்டுமானால் இந்த மாற்றம் அவசியமாகும்.**

# பெண் தீவிரவாதியின் மனமாற்றம்

**பிலிப் பேப்டிஸ்ட்**

இந்தியாவில் குண்டுவைப்பதற்காக சென்றுகொண்டிருந்த பெண் தீவிரவாதி அமீனாவைக் கைதுசெய்து சிறையில் அடைத்தார்கள். பாதுகாப்பு கருதி இவருடைய உண்மையான பெயர் சொல்லப்படவில்லை. இவர் ஆப்பிரிக்க நாட்டைச் சேர்ந்தவர். 5 ஆண்டு தண்டனைபெற்று, சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார்.

இவரைச் சிறைச்சாலையில் தொடர்ந்து சந்தித்த அட்வென்டிஸ்ட் போதகரின் முயற்சியால், தீவிரவாதத்தைக் கைவிட்டு, இப்போது ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்.

இவருடைய குற்றத்தின் தீவிரம் கருதி, இவரைப் பாதுகாப்பான தனிச் சிறையில் அடைத்திருந்தார்கள். "தீமையை அழித்தால் பரதீசில் இடம் கிடைக்கும்" என்று இவரை மூளைச்சலவை செய்திருந்தார்கள்.

இவரைச் சந்திப்பதற்கான ஏற்பாட்டை, சிறைச்சாலை அதிகாரி செய்திருந்தார். அமீனா முதலில் போதகரோடு பேசச் சம்மதிக்கவில்லை. போதகர் திரும்பத்திரும்ப வந்தார். அந்தச் சந்திப்பு தனியறைக்கு வெளியே சூரிய வெளிச்சத்தில் நடந்ததால், வெளியே வருவதற்காக அமீனா அதற்கு சம்மதித்தார்.

முதலில் சந்தித்த போது , போதகர் அவரிடம் தாம் ஜெபிப்பதாகச் சொன்னார். அதற்கு அமீனா, "நான் உங்களுக்கு ஜெபிக்கிறேன்" என்றார். ஆனாலும் போதகரே ஜெபித்தார்.

இடையில் வேறு வேலையின் நிமித்தம் போதகரால் சில வாரங்கள் வரமுடியவில்லை. 'போதகர் ஏன் வரவில்லை?' என்று அமீனா கவலைப்பட்டார். அறையில் போதகர் விட்டுப்போயிருந்த வேதாகமத்தை எடுத்து வாசிக்க ஆரம்பித்தார்.

பின்னர், சிறைச்சாலையில் ஜெபக்கூட்டம் நடப்பதாக கேள்விப்பட்டு, அங்கே செல்ல விரும்பினார். மற்ற கைதிகளோடு பேசலாம் என்பதற்காக அவ்வாறு விரும்பினார்.

கூட்ட முடிவில் தங்களை ஒப்படைக்கும்போது போதகர் கேட்டபொழுது, அமீனாவும் எழுந்து நின்றார். சில வாரங்களில் ஞானஸ்நானம் பெற்றார். "நான் எப்படி மாறினேன் என்பது எனக்குத் தெரியவில்லை. சிறைச்சாலையில் நான் தனியாக இருந்ததால் தான் என்னால் யோசிக்க முடிந்தது. நான் சந்தோஷமாக இருக்கிறேன்" என்கிறார் அமீனா.

"என் நண்பர்களுக்கு உண்மையைச் சொல்ல வேண்டும். விடுதலையான பிறகு எனக்கு உள்ளதை எல்லாம் அதற்காகச் செலவிடப்போகிறேன்" என்கிறார் அமீனா.



**கிழக்கு மத்திய ஆப்பிரிக்க டிவிஷன் தலைவருக்கு, சிறப்பு உதவியாளராகப் பணிபுரிகிறார் பிலிப் பேப்டிஸ்ட்.**